S. M. Fernando
OPTICIANS
Sight Tested Prescriptions Accurately Dispensed.
580, Hospital Road, Near Bank of Ceylon, Jaffna.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளைச் சரியாகக் கொடுப்பவர்கள்.
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கி அருகாமை, யாழ்ப்பாணம்.

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 25 செவ்வாய்க்கிழமை (07-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 132

# புலிகள் தொடர்பான அணுகுமுறை: இந்தியத் தரப்பினர் மறுபரிசீலனை!

## தமிழக நிலை முட்டுக்கட்டையாம்

சென்னை, ஏப்ரல் 7

விடுதலைப் புலிகள் தொடர்பான தனது அணுகுமுறையை இந்தியத் தரப்பு மறுபரிசீலனை செய்து வருவதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

விடுதலைப் புலிகளுக்கு சாதகமான ஒரு நிலையைப் பின்பற்ற இந்தியத் தரப்பு விரும்பினாலும், தமிழகத்தில் உள்ள தள நிலைமை அதற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தொடர்பான அணுகுமுறையில் தொடர்ந்து இறுக்கமான நிலையைக் கடைப்பிடிப்பது இந்தியாவின் பிராந்திய நலனுக்கு உகந்ததல்ல என்று இந்திய உயரதிகாரிகள் மட்டத்தில் கருதப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய புலனாய்வுத் துறையான ''றோ'' (Raw) அமைப்பின் தலைமையிலும் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. புலிகளுக்கு ஆதரவான போக்குடையவர்கள் என்று கருதப்படுவோரே இப்போது ''றோ''வின் தலைமைப்பதவிக்கு வந்திருக்கின்றனர்.

இதேசமயம்—

வெளியுறவு விவகாரங்களிலும் இந்தியக் கொள்கைகளில்—அண்மைக்காலங்களில்—பல்வேறு பாரிய மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றன.

அமெரிக்க சார்புப் போக்கு, இஸ்ரேலை அங்கீகரித்தல் போன்ற விடயங்களில் இந்தியாவின் கொள்கை தலைகீழாக மாறியிருக்கிறது.

இந்நிலையில் விடுதலைப் புலிகளின் விவகாரத்திலும் போக்கை ஏன் சற்று மாற்றிக் கொள்ளக் கூடாது என்று உயரதிகாரிகள் மட்டத்தில் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது

[4ஆம் பக்கம் பார்க்க]

## 4 தினங்களில் கடவுச்சீட்டு

கடவுச்சீட்டுக்கான விண்ணப்பங்கள் உரிய தஸ்தாவேஜுகளுடன் பூரணமாக இருந்தால் சாதாரண கட்டணத்தைச்செலுத்தி நான்கு தினங்களில் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிகமாக ஐந்நூறு ரூபா கட்டணம் செலுத்தி ஒரே தினத்தில் கடவுச்சீட்டைப் பெறும் வசதியும் தற்போது இருந்து வருவதும் தெரிந்ததே. (இ-எ)

## செய்திச் சரம்

### வேவு பார்த்த சிப்பாய் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஏப். 7

நேற்றுக்காலை தெல்லிப்பழையில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் காவலரண்களை வேவு பார்த்த சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சிப்பாயின் சடலத்தையும், அவரிடம் இருந்த ஜே. ஆர். ரகக்கைக்குண்டுகள் இரண்டையும் புலிகள் கைப்பற்றினர். [உ-3]

### அமேசனில் ம. எண்ணெய்

யாழ்ப்பாணம், ஏப். 7

'அமேசன்' என்ற கப்பல் நாளை டருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கப்பலில் வடபகுதிக்கென பெருமளவு மண்ணெண்ணை எடுத்துவரப்படுவதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-5]

### செட்டிகுளத்தில் ஷெல் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஏப். 7

வவுனியாவில் செட்டிகுளம் பகுதியில் இருந்து மன்னார் நோக்கி முன்னேற படையினர் எடுத்த முயற்சி தோல்வி கண்டதை அடுத்து கடந்த மூன்று நாட்களாக செட்டிகுளம் காவலரண்களில் இருந்து குடியிருப்புகளை நோக்கி படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

அதேவேளை, மணலாறு மாவட்டத்தில் கொக்குத் தொடுவாய், கோட்டைக் கேணி முகாம்களில் இருந்தும் ஷெல் தாக்குதல்கள் தொடர்கின்றன. [உ-3]

### வவுனியாவில் மாணவன் கைது

யாழ்ப்பாணம், ஏப். 7

பொருள்கள் வாங்க வவுனியா நகருக்குச் சென்ற பாடசாலை மாணவர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டார்.

ஓமந்தை மகா வித்தியாலய மாணவனான பாளயசிங்கம் தயாபரன் என்பவரே கைதானவர் ஆவார். [3]

### இன்று முதல் 4 மணி நேரம் மின்வெட்டு

கொழும்பு, ஏப். 7

இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் தினமும் நான்கு மணி நேர மின் வெட்டு அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்தை சிக்கனமாகப் பாவிக்கும் படி இலங்கை மின்சார சபை விடுத்த வேண்டுகோள் உரிய பலனை அளிக்கத் தவறியதை அடுத்தே மின்வெட்டு நேரத்தில் இன்று முதல் மேலும் ஒரு மணித்தியாலயம் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. [இ-10]

### தடைகுறித்து இன்னும் முடிவு இல்லையாம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வது பற்றி மத்திய அரசு இன்னும் முடிவு எடுக்கவில்லை.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் நேற்று இத் தகவலை வெளியிட்டார். (இ-எ)

### காடுகளுக்குள் நுழையத் தடை

கொழும்பு, ஏப். 7

நாட்டிலுள்ள 137 காடுகள் பாதுகாப்புக் காடுகளாக அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அந்தக்காடுகளுக்குள் எவரும் நுழையக் கூடாது என்றும் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது.

### பலவந்தமாக குடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 7

தம்பலகாமம் அகதி முகாமில் தங்கியிருந்த 10 தமிழ்க் குடும்பங்கள், பாலம்போட்டாறு பகுதியில் உள்ள சிங்கள முஸ்லிம் குடியேற்றத்திட்டத்தில் பலவந்தமாக குடியேற்றப் படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாலம்போட்டாறுப் பகுதியில் அமைந்துள்ள குடியேற்றத் திட்டத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் சிங்கள முஸ்லிம் மக்களே குடியேற்றப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. [இ-3]

### வீரமரணம்

யாழ்ப்பாணம், ஏப். 7

கடந்த 19ஆம் திகதி சிலாவத்துறை இராணுவ முகாம் தகர்ப்பின்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ராயு [நவநீதநாதன் சுரேஷ் குமார்-சங்கானை] வீரமரணமடைந்தார். [உ]

### கணக்காய்வாளருக்கு உலகவங்கி பாராட்டு

ஸ்ரீலங்கா கணக்காய்வாளர் திணைக்களத்தின் பணி உலக வங்கியின் பாராட்டைப் பெற்றுள்ளது. திணைக்களத்தின் கணக்காய்வு அறிக்கைகளும் கணக்குகளும் உயர் தரத்தில் இருப்பதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

உலக வங்கி கடந்த வாரம் கணக்காய்வாளர் நாயகம் காமினி ஏப்பாவுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியில் காமினி ஏப்பா நாடாளுமன்றத்தில் சகல கட்சியினராலும் விதந்துரைக்கப்பட்டமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பலாலியில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப் 7

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று சுற்றுப் புறக் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது.

கட்டுவன், குப்பிளான், குரும்பசிட்டி, வடக்கும் புன்னாலைக் கட்டுவன், வசாவிளான் மற்றும் மல்லாகத்தை அண்டிய பகுதிகளில் விழுந்து ஷெல்கள் வெடித்தன. [உ-15]

## மேலும் 2,500 ஈழ அகதிகள் 3 தினங்களில் திரும்புவர்

கொழும்பு, ஏப். 7

மேலும் 2 ஆயிரத்து 500 தமிழ் அகதிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்பதாக - அடுத்து வரும் 3 நாட்களுக்குள் இலங்கைக்கு தமிழ்நாடு அரசாங்கத்தினால் திருப்பி அனுப்பிவைக்கப்படவிருக்கின்றனர்.

இலங்கையின் புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் திலக் சந்திரசேகரா இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

மூன்று தொகுதிகளாக இந்த அகதிகள் கப்பல் மூலம் தலைமன்னாருக்கும் திருகோணமலைக்கும் அனுப்பி வைக்கப்படுவர் என்றும் —

முதலாவது தொகுதி இன்று தமிழ்நாட்டில் இருந்து புறப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். [உ-எ]

## தமிழகத்திலிருந்து அனைத்து ஈழ அகதிகளும் திருப்பி அனுப்பப்படுவர்

தமிழகத்திலிருந்து தற்போது திரும்பி வரும் அகதிகள் போக எஞ்சியிருக்கும் 95 ஆயிரம் தமிழ் அகதிகளையும் இவ்வாண்டு இறுதிக்குள் இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் திரு. திலக் சந்திரசேகரா இத் தகவலை வெளியிட்டார்.

கடந்த ஜனவரி 22 ஆம் திகதி முதல் இதுவரை 15 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் அகதிகள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் அவர் சொன்னார். (உ-எ)

## யாழ். மாவட்ட பாடசாலை ஆசிரியர் வெற்றிட விவரம்

### மாகாணசபை கோருகிறது

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களையும் அவர்கள் போதிக்க வேண்டிய பாடங்களின் விவரங்களையும் உடன் திரட்டி அனுப்புமாறு வடக்கு. கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சு யாழ். கல்வி அலுவலகத்தைக் கோரியுள்ளது.

இதனை அடுத்து வெற்றிடங்களின் பட்டியலை உடனடியாகத் தமக்கு அனுப்பி வைக்குமாறு கல்விப் பணிப்பாளர் சகல கோட்டக்கல்வி அதிகாரிகளையும் கேட்டுள்ளார். (இ-5)

## முச்சந்தி முரளி



அகதிகள் விசயத்திலை அவதிப் படுகினம் போலை...!

## அம்பாறையில் தமிழர் மீது தொடரும் ராணுவ வன்முறை

### புலிகள் பிரமுகர் தமிழன்பன் தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 7

★ 1990 ஜூன் மாதத்தில் போர் தொடங்கிய பின்னர் பொத்துவில் பகுதியிலிருந்து மட்டும், இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள்.

★ இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் பல பழந் தமிழ்க் கிராமங்கள் சிங்களக் குடியேற்றங்களாக அபகரிக்கப்பட்டுள்ளன.

★ அம்பாறை — மட்டக்களப்பு மாவட்டங்களில் தமிழ்க் கிராமங்களைப் படையினர் சுற்றிவளைத்துத் தொடர்ந்து அழித்து வருகிறார்கள். அங்கு இராணுவ வன்முறைகளும் தொடர்கின்றன.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு — அம்பாறைப் பிராந்திய அரசியல் பிரிவின் பொறுப்பாளர் தமிழன்பன்.

''விழிப்பு'' பத்திரிகைக்கு வழங்கிய ஒரு பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழர்களின் நிலை குறித்து விவரிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த இரு மாவட்டங்களிலும் பெண்கள், சிறார்கள்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பணப் புழக்கத்தைச் சீராக்க கொழும்பிலிருந்து பணம் வியாழனன்று கப்பலில் வரும்

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ். மாவட்டத்தில் சீர்குலைந்துள்ள பணப்புழக்கத்தைச் சரிசெய்யும் பொருட்டு நாளை மறுதினம் வியாழக்கிழமை இலங்கை வங்கிக்குக் கொழும்பில் இருந்து 'குமாரி' கப்பல் மூலம் பணம் எடுத்து வரப்படுகிறது.

கடந்த மாத ஆரம்பத்தில் இருந்து குடாநாட்டில் பணப்புழக்கம் சீர்குலைந்து இப்போது புதுவருட காலத்தில் மோசமடைந்துள்ளது தெரிந்ததே.

பணப் புழக்கத்தைச் சீராக்குவதற்கு கப்பல் மூலம் பணம் அனுப்புமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்குப் பலவித தாமதங்களின் பின்னர் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

1991 அக்டோபர் மாதத்தின் பின்னர். இப்போது தான் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் பணம் எடுத்து வரப்பட உள்ளது. (அ-3)

## தொண்டர் ஆசிரியர் விடயம்; கொழும்புக்கு தூதுக்குழு!

யாழ்ப்பாணம், ஏப். 7

வடக்கில் தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பான உண்மை நிலையை கல்விச் சேவைகள் ஆணைக்குழுவுக்கும் கல்வி அமைச்சரான ஜனாதிபதிக்கும் நேரில் எடுத்துக் கூறுவதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து தூதுக்குழு ஒன்று கொழும்பு செல்லவுள்ளது. இதற்கான அனுமதி கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

கோட்டங்களுக்குப் பொறுப்பாக உள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், தமிழர் ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள் தொண்டர், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றே வடபகுதி தொண்டர் ஆசிரியரின் நியமனம் தொடர்பான உண்மை நிலையை நேரில் சென்று விளக்கும் என்று முடிவாகியுள்ளது.

எதிர்வரும் மே மாத முற்பகுதியில் மேற்படி சந்திப்பினை நடத்துவதற்கு அனுமதி பெற்றுத்தருமாறு கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கல்விச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸிடம் கேட்டுள்ளார். [அ-5]

## ஜி. சீ. ஈ. சாதாரண தரப்பரீட்சை; 442 மாணவர்களுக்கு 8 பாடங்களிலும் 'டி'

கொழும்பு, ஏப். 7

கடந்த டிசம்பரில் நடைபெற்றதும் இப்போது வெளியிடப்பட்டதுமான ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் படி, 442 பரீட்சார்த்திகள் எட்டுப் பாடங்களிலும் விசேட சித்தி அதாவது 'டி' பெற்றுள்ளார்கள்— என்றும்—

67 ஆயிரத்து 250 பேர் ஜி. சீ. ஈ உயர்தர வகுப்பில் சேரத் தகுதி பெற்றுள்ளனர் என்றும்— தெரிவிக்கப்படுகிறது.

விசேட சித்தி பெற்றவர்களில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

கொழும்பு மாவட்டத்தில் 1[illegible]3 பேரும் கண்டி மாவட்டத்தில் 66 பேரும் காலி மாவட்டத்தில் 45 பேரும் அனைத்துப் பாடங்களிலும் விசேட சித்தி பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டப் பரீட்சை முடிவுகள் நேற்று விமானம் மூலம் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்பட்டது [இ-எ]

## மனைவி சுருக்கிட்டு மரணமானார்; கணவன் பிள்ளைகளை வெட்டினார்!

### மந்துவிலில் நேற்று கொடும்

தென்மராட்சி, ஏப். 7

ஒரே குடும்பத்தில் இடம் பெற்ற கொடூரச் சம்பவம் ஒன்றில் தாயார் கழுத்தில் சுருக்கிட்ட நிலையிலும் மகன் ஒருவர் தொண்டை வெட்டப்பட்ட நிலையிலும் மரணமானார்கள். தகப்பனாரும் மற்றும் இரு குழந்தைகளும் தொண்டை வெட்டப்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று வரணி மந்துவில் பகுதியில் இச்சம்பவம் நடந்தது.

சம்பவத்தில் இறந்தவர்கள் தாயாரான சிவபாதம் பவளராணி [வயது 31], மகன் பிரியதர்சன் [வயது 10] என்று தெரிவிக்கப்படுகிறது

தகப்பனாரான கணபதி சிவபாதம் [வயது 40] மற்றும் பிள்ளைகளான சஞ்யா பெண் — [வயது 6], பிரசாத் [வயது 4] ஆகியோரே தொண்டையில் வெட்டுக் காயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மனைவி சுருக்கிட்ட நிலையில் இறந்து கிடந்த செய்தியை அடுத்து கணவரான கணபதி சிவபாதம் சவரக் கத்தியால் தமது மூன்று குழந்தைகளின் தொண்டையை வெட்டிவிட்டு தனது தொண்டையையும் வெட்டினார் என்று தெரிவிக்கப்பட்டது.

தனது தற்கொலை முயற்சி

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

ஓடியல் தேவை. தொடர்பு கொள்ளவும் 'அன்னா பாம்' இணுவில். [சி-1829)

சோடா மென்பானங்கள் போன்றவை தயாரிப்பதில் அனுபவமும் ஆற்றலுமுள்ளவர்கள் பகுதிநேர அல்லது முழுநேர அடிப்படையில் தேவை. விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். 16, மூன்றாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி/1834)

### தவறிவிட்டது

பாலசிங்கம் துரைசிங்கம் என்பவரது 672522269V இலக்க அடையாள அட்டை 4-4-92 சனிக்கிழமை லொரியானில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுழிபுரம் தெற்கு, சுழிபுரம் என்னும் முகவரிக்கு தயவு செய்து அனுப்பி வைக்கவும். [4625[

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-1825]

### A/L வினாத்தாள்கள்

A/L 91 பரீட்சைக்குத் தயாராகும் விஞ்ஞான மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-1827]

விலங்கியல், தாவரவியல், பௌதிகவியல், இரசாயனவியல், தூய — பிரயோக கணிதம் முன்மாதிரி வினாத்தாள்கள் விற்பனையாகின்றன. Personal New Science Centre, எழிலகம் முன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/1811]

### A/L 92 வினாத்தாள்

தற்போது நடைபெறுகின்ற G. C. E A/L - 92 விசேட பரீட்சைக்குரிய கலை, வர்த்தக, விஞ்ஞான பாடங்களின் வினாத்தாள்கள் விற்பனையாகின்றன. அறிவகம் புத்தகசாலை. 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [சி-1815]

### இலவச திருமண சேவை

34 வயது. சதயம், செவ்வாய் 7. B. Sc. Computer, கொழும்பு அரச சேவையில் பணிபுரிபவருக்கு ஏற்ற மணமகன் தேவை. வெளிநாடும் கவனிக்கப்படும். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4616]

35 வயது, விசாகம் 2 சுவிஸில் தொழில் புரிபவருக்கு சுவிஸ் நாட்டில் மணமகன் தேவை. விண்ணப்பங்கள் ஏற்கப்படும். சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4718]

24 வயது, மகரம் 1, செவ்வாய் 8, கவிலிக் உள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை விண்ணப்பங்கள் ஏற்கப்படும். தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4606]

### மலிவு விற்பனை

1992 ஆம் ஆண்டுக்கான திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர், டயரிகள் மலிவு விலையில் எல்லாப் புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. அன்பளிப்புச் செய்யும் நிறுவனங்களுக்கு விசேட கழிவுண்டு. திருக்கணிதம்- சாவகச்சேரி. [சி-1755]

---


ஆயிரம் யானை கொன்றால் பாடிடும் காவியமோ?
ஆண்டவன் தீமை வென்ற காதையின் ஓவியமோ?

தபக்காலத்தை முன்னிட்டு

## கல்வாரிப் பரணி

பக்தி இசை உரை நாடகச் சித்திரம்

காலம்: 1992 ஏப்ரல் 10, 11, 12 (வெள்ளி, சனி, ஞாயிறு) தினமும் மாலை 6-45 மணி

இடம்: மன்ற அரங்கு, 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

தயாரிப்பு:

## திருமறைக் கலாமன்றம்

● ஆசனப் பதிவுக்கு அலுவலகத்துடன் முன் கூட்டியே தொடர்பு கொள்ளவும். [சி-1771]


---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### சி. பொ. வேலாயுதபிள்ளை

தோற்றம்: 06-09-1917 — மறைவு: 08-03-1992

தங்களின் ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நந்தாவில்,
கொக்குவில். [4626]

---

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் சுப்பையா கந்தசாமி

(ஓய்வு பெற்ற மருந்தாளர்)

தோற்றம்: 06 — 06 — 1925 — மறைவு: 09 — 03 — 1992

திதி: 08 — 04 — 1992

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி நவில்வதுடன், 09 - 04 - 1992 இல் ஊரெழு கிழக்கில் நடைபெறும் அந்தியேட்டி வைபவத்தில் கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

எங்களது நல்வாழ்விற்காகத் தன்னையே அர்ப்பணித்த எமது குலவிளக்கின் ஆத்மா சாந்தியடைய குப்பிழான் சொக்கர்வளவு சோதி விநாயகரின் பாதார விந்தங்களைப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, மக்கள்.

பெற்றோல் செற் அருகாமை,
புன்னாலைக் கட்டுவன் வடக்கு. [20[illegible]]

---

## முல்லைத்தீவிலும் ஜி. சீ. ஈ. பரீட்சை சுமுகமாக நடைபெறுகிறது

முல்லைத்தீவு, ஏப். 7

முல்லைத்திவு மாவட்டத்தில் ஜி.சீ.ஈ. உயர்தர விசேட பரீட்சை திட்டமிட்டபடி நான்கு பரீட்சை நிலையங்களில் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் 3 பரீட்சை நிலையங்களும், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் ஒரு பரீட்சை நிலையமும் இயங்கி வருகின்றது.

வினாத்தாள்கள், காகிதாதிகள், விடைத்தாள்கள் மற்றும் பொதிகளை ஏற்றி இறக்கும் பணியை முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கி வரும் '' சிறுவர் பாதுகாப்பு நிதியம் '' ஏற்றுக் கொண்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1991 ஆம் ஆண்டிற்கான கர்நாடக சங்கீத, பரதநாட்டிய செயல் முறைப் பரீட்சைகள் யாவும் நடைபெற்று முடிந்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (த)

---


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

92 கலை, வர்த்தகம் பிரிவு 2

DAY CLASSES [8.00 — 3.00]

ஆரம்பம்:- 09 — 04 — 92 8.00 மணி

பொருளியல் — திரு. கலாகரன்
வர்த்தகம் — திரு. இரட்ணம்
கணக்கியல் — திரு. S. K. பிரபாகரன்
அளவையியல் — திரு. A பிரபாகரன்

மற்றும் சகல பாடங்களும் நடைபெறும்.

மு. குறிப்பு:- எமது நிறுவனத்தில் மட்டுமே DAY - CLASSES சிறப்பாக நடைபெறுகின்றன.

(சி/1831)


---

## 90ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
### பாக்கியம் சாந்தலிங்கம்


03 01 1992 அன்று வேலணை மேற்கில் காலமான திருமதி பாக்கியம் சாந்தலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 01-04-1992 அன்று கோப்பாயில் நடைபெற்றன என்பதை உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மக்கள் மருமக்கள்,
சா. இந்திரன் (மகன்).

கோப்பாய் தெற்கு,
கோப்பாய். [20371]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### குருநாதர் இந்திரகுமாரன்

[மக்கள்வங்கி, பரந்தன்]

நாட்கள் 31 ஓடி மறைந்தபோதும், உங்கள் ஒளி முகமோ இங்கு மறையவில்லை. மக்கள் எல்லாம் கதறி அழ, எம் அன்புருவே! நீர் சென்றதெங்கே? பெருகி வரும் கண்ணீரை நிறுத்திடவும் முடியவில்லை. காலனுக்கும் கருணை இல்லை. இன்று காவலுக்கும் தெய்வமில்லை.

கடந்த 03-03-1992 அன்று நாம் எல்லோரும் கதறி அழ, எமை விட்டுப் பிரிந்து சென்று இறையடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று [07-04-92] செவ்வாய்க்கிழமை காலை 10 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அன்றையதினம் நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அன்னாரின் பிரிவு கேட்டு உளமுருகி, கண்ணீர் உகுத்து, உதவிகள் பல செய்த எல்லோருக்கும் எமது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

மனைவி, பிள்ளைகள்.
(சி/1772)

---

# மரண அறிவித்தல்கள்

## கோவிந்தசாமி நாகராஜா

(மாஸ்ரர்)

உமா எலக்றோ மெற்றல் பிளேற்றிங் உரிமையாளர் கோவிந்தசாமி நாகராஜா 06-04-92 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற கோவிந்தசாமியினதும், திருமதி பாக்கியத்தினதும் அன்பு மகனும், வசந்தகுமாரியின் அன்புக் கணவரும், சர்மிஜா, கோபிநாத் ஆகியோரின் தகப்பனாரும், நாகேஸ்வரி, புவனேஸ்வரி, கமலேஸ்வரி, மகேஸ்வரி, உமாராணி, மோகனதாஸ், ரவீந்திரராசா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக அவரது இல்லத்தில் இருந்து கோம்பையன் மணல் மயானத்திற்கு நேற்று (06-04-92) எடுத்துச் செல்லப்பட்டது. இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி (மருமகன்),
மனைவி, பிள்ளைகள்.

இல 362, கஸ்தூரியார் வீதி-
நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம். [20372]

## முதலி பொன்னையா

உடுவில் கிழக்கு நாகம்மாள் கோவில் வீதியைச் சேர்ந்த லொறி உரிமையாளர் முதலி பொன்னையா 06 - 04 - 1992 இல் காலமானார்.

அன்னார் இரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்வராசா, தேவராசா, சிவராசா, ஆனந்தராசா, உலகராசா, காலஞ்சென்ற விஜயராசா, செல்வசுலோஜனா, தேவசுலோஜனா, தர்மராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா, இரத்தினசிங்கம், பூபாலசிங்கம், இராஜேஸ்வரி, சறோஜினிதேவி, தேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07 - 04 - 1992) பிற்பகல் 2 மணியளவில் தகனக் கிரியைக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. தேவராசா (மணி)
[மகன்]

உடுவில் கிழக்கு. [20375]

## செல்வராசா ஜெயக்குமார்

செல்வராசா ஜெயக்குமார் 6 - 4 - 92 இல் காலமானார். இவர் செல்வராசா கமலாதேவியின் அன்பு மகனும், ஜெயக்குமார் (பிரான்ஸ்), நந்தினி, உஷாநந்தினி, சுவைதினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சங்கரப்பிள்ளை பாக்கியம், இராமலிங்கம் ஜானகி, அம்பலவாணர் மாதவி, நடராஜா மகேஸ்வரி, ஆறுமுகம் மனோன்மணி, தட்செணாமூர்த்தி பரமேஸ்வரி, தர்மலிங்கம் மோகனதாஸ் (சின்னத்தம்பி—பிரான்ஸ்) ஆகியோரின் அன்புமருமகனும், பத்மாவதி சிவஞானம், கடம்பவனநாதன் ஜெயதேவி, விஜயபாலன் பேரின்பநாயகி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற நாகமுத்தர், திருமதி நாகமுத்து, காலஞ்சென்ற தர்மலிங்கம், திருமதி சின்னம்மா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (7-4-92) பி. ப. 3-00 மணியளவில் கோணாந்தோட்ட வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
நா. செல்வராசா
(தந்தை)

41/9, கோணாந்தோட்ட வீதி,
யாழ்ப்பாணம். (20377)

## சரவணமுத்து ஆறுமுகசாமி

[தலைமை ஆசிரியர், துணைவி அமெரிக்கன் பாடசாலை, வட்டுக்கோட்டை]

பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வட்டு இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியருமாகிய சரவணமுத்து ஆறுமுகசாமி நேற்று [6 - 4 - 92] திங்கட்கிழமை காலை 8 மணியளவில் காலமானார்.

இவர் சரவணமுத்து ஆசிரியரின் மகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் நிரஞ்சன், குகதாஸ், அனுசுயா, தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரது இல்லமான 'ஹற்றர் வாசம்', வட்டுத்தெற்கு, வட்டுக்கோட்டையில் நடைபெறும். உற்றார், உறவினர்கள், அன்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:
ஆ. விமலாதேவி [மனைவி],
பிள்ளைகள்.

வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.
[4627]

## பொன்னம்பலம் முத்தையா தணிகாசலம்

புலோலியை பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆவரங்கால் சிவன்கோவிலடியைச் சேர்ந்தவருமான பொன்னம்பலம் முத்தையா தணிகாசலம் 6 - 4 - 92 அன்று காலமானார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ரஞ்சிதராணி, பானுமதி, அனுஷபா, காந்திமதி, மனோகரி, ஸ்ரீஸ்கந்தராசா, முருகானந்தம், சக்திவேல் ஆகியோரின் அன்புத் தந்தையும், குமாரகுலசிங்கம், சிற்றம்பலம், தயானந்தன், துரைராஜசிங்கம், கலாவல்லி ஆகியோரின் அன்பு மாமனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரிகைகள் 7 - 4 - 92 (செவ்வாய்க்கிழமை). பிற்பகல் 3 - 00 மணியளவில் ஆவரங்கால் குடும்ப மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இத் தகவலை ஏற்றுக் கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்
த. ஸ்ரீஸ்கந்தராசா. [மகன்]

[20382]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உண்மையை அழிக்க முடியாது!

ஆளும் கட்சி எம். பிக்களின் ஆதரவுடன் "கறுப்புப் பூனை" என்ற இராணுவத் துணைப்படை ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் கறுப்புப் பூனைப்படை பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 156 முன்னணி உறுப்பினர்களைப் படுகொலை செய்தது!

இந்தத் தகவலை முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல தெரிவித்திருக்கிறார்! அவர் வெளியிட்டதாகக் கூறப்படும் அறிக்கையில், இது விடயம் குறித்து விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டால், முழு விவரங்களையும் வெளியிடத் தாம் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொலவின் பெயர் இப்போது அடிக்கடி செய்திகளில் வருகிறது. அவரது தாய் மற்றும் உறவினர்களை ஜே.வி.பி. இயக்கம் கொலை செய்ததாகக் கூறப்பட்டது. அதனைத் தொடர்ந்து திரு. உடுகம்பொல அரசுக்கு ஆதரவான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார் என்று பேசப்பட்டது.

அரசாங்கத்தின் சில தீய நடவடிக்கைகளுக்கு இவர் பொறுப்பாக இருந்து தலைமை வகித்துச் செயற்பட்டார் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் திடீரென அவரை பதவியிலிருந்து ஓய்வு பெறுமாறு அரசு நிர்ப்பந்தித்தது.

மனித உரிமை மீறல் குற்றங்களில் ஈடுபட்டதாலேயே அவர் கட்டாய ஓய்வு பெற நிர்ப்பந்திக்கப்பட்டார் எனப் பரவலாகக் கூறப்பட்டது. அவர் தலைமறைவாகி விட்டார் என்று சில நாட்களில் அறிவிக்கப்பட்டது.

அரசாங்கம் தனது பயங்கரச் செயல்களை மூடிமறைப்பதற்காக திரு. உடுகம்பொலவைப் பலிக்கடாவாக்குவதாகவும் ஓர் அபிப்பிராயம் நிலவியது.

திரு. உடுகம்பொல மறைமுகமாக இருந்து இப்போது வெளியிட்டிருக்கும் தகவல்கள் அரசாங்கத்தை முந்திக்கொண்டு அவர் தமது பக்கத்துக்கு வெற்றியை தேடுவதற்கான ஆரம்பமாக அமைகின்றன.

தெற்கில் ஜே.வி.பியின் தொல்லைகள் இருந்த காலத்தில், அதனை அழிப்பதென்ற போர்வையில், அரசாங்கக் கட்சிக்கு எதிரான ஆயிரக்கணக்கான மக்களை அரசு கொலை செய்தது என்ற குற்றச்சாட்டு மிகப் பழையது.

அக்காலத்தில் தெற்கில் அரசாங்கம் கண்ணை மூடிக்கொண்டு அக்கிரமங்களைப் புரிந்து மனித உரிமைகளை மீறியது என்பது ஏற்கனவே இருந்த குற்றச்சாட்டு அரசாங்கத்துக்கு ஆதரவான கொலைப்படை ஒன்று இயங்கியது என்று எதிரணியினர் கூறி வந்த போதிலும், அரசாங்கம் அதனை மறுத்து வந்தது.

ஆனால் திரு. உடுகம்பொல வெளியிட்டுள்ள தகவல்கள், அரசின் உண்மை ரூபத்தை வெளியே காட்டியுள்ளன. அவை நிரூபிக்கப்பட்டால் அரசு பெரும் சங்கடத்தில் மாட்டிக்கொள்ளும். ராஜினாமாச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் கூட ஏற்படலாம்.

குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் வரை சந்தேக நபரைக் குற்றவாளி என்று உறுதியாகக் கூற முடியாது எனினும் இந்த விவகாரத்தில் 1988, 89 ஆம் ஆண்டுகளில் தங்கள் கணவன்மாரையும், பிள்ளைகளையும், சகோதரர்களையும் இழந்த பெண்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளார்கள். அதனால் படுகொலைகள் நடந்தது உண்மையே என்ற நிலைப்பாடு உருவாகிறது.

அந்தப் படுகொலைகளைச் செய்தவர்கள் யார் என்பதை நீண்ட காலத்துக்கு மறைக்க முடியாது. உண்மை என்றோ ஒரு நாள் தெரியவரும். அது சில காலத்துக்கு மறைந்திருந்தாலும் உரிய நேரத்தில் தனது வடிவத்தை உயர்த்திக் கொள்ளும்.

# இந்தியப் படை நிலை கொண்ட காலத்திலேயே வடக்கில் கூடுதலானோர் மரணமானார்கள்

## ஆனால் அரைவாசிக்கு மேல் பதிவு இல்லை

'வட பிரதேசத்தின் அண்மைக் கால இறப்புக்களும் அவற்றுக்கான காரணிகளும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று கடந்த மாத இறுதியில் யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெற்றது. அக்கருத்தரங்கில் புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. கா. குகபாலன் ஆற்றிய உரையின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

வட பிரதேசத்தில் கடந்த 10 ஆண்டுகளாக நிகழ்ந்த மரணங்கள் பற்றிய சரியான தகவல்கள் இறப்புப் பதிவேடுகளில் இல்லை. பதியப்பட்டுள்ள இறப்புக்களிலும் அதற்கான காரணங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

நெருக்கடியான கால கட்டங்களில் இதுபோன்ற குறைபாடுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்பதை ஏற்றுக்கொண்டாலும், அதனுடன் தொடர்புடைய தனிப்பட்டவர்களின் அசிரத்தையும், பொதுமக்களிடையேயுள்ள அக்கறையின்மையுமே அந்நிலைக்குக் காரணம் என்பது தெளிவாகிறது.

யாழ். நகர் மேற்கு பதிவாளர் பகுதியைப் பெரிதும் அடிப்படையாகக் கொண்டு வடபிரதேசத்தின் ஏனைய மாவட்டங்களின் பதிவாளர் பிரிவுகளின் தகவல்களையும் திரட்டி இந்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

ஆனாலும் மன்னார், வன்னி ஆகிய இரு மாவட்டங்களின் பதிவாளர் பிரிவுகளின் பூரண தகவல்கள் ஆய்வில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

ஆய்வின்படி கடந்த 10 ஆண்டு காலப் பகுதியில் வட பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மரணங்களின் எண்ணிக்கை 43 ஆயிரத்து 941 ஆகும்.

இக்காலப் பகுதியில் அதிக எண்ணிக்கையான மரணங்கள் நிகழ்ந்ததாகக் கருதப்படும் 1987—89 காலப் பகுதியில் (இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த காலம்) நிகழ்ந்த மரணங்களில் 5 ஆயிரத்து 785 மரணங்கள் ம-

### ஆய்வரங்கு

-டுமே பதிவில் உள்ளன.

இக்காலப் பகுதியில் 13 ஆயிரத்துக்கு மேற்பட்ட மரணங்கள் நிகழ்ந்திருப்பதாக உத்தேசிக்கப்படுகிறது. ஆனால் அவற்றில் அரைவாசி கூடப் பதிவில் இல்லை என்பது ஆய்வில் இருந்து தெரிய வருகிறது.

கடந்த 10 ஆண்டு காலப் பகுதியில் மொத்தமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள இறப்புக்களிலும், மரணத்துக்கான சரியான, தெளிவான காரணங்கள் காட்டப்படவில்லை.

### வயோதிபம் இயற்கை மரணம் நோய் அல்ல

உதாரணமாக 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் பலரது மரணங்களுக்குக் காரணமாக 'வயோதிபம்' என்பது காணப்படுகிறது.

இக்காலப் பகுதியில் இறந்த குழந்தைகளில் சுமார் 90 குழந்தைகளின் பதிவில் மரணத்துக்கான காரணம் "இயற்கை மரணம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் 'இயற்கை மரணம்' என்பது ஒரு நோயல்ல. அதே போல 'வயோதிபம்' என்பதும் நோயல்ல. ஆனால் இங்கே பெரும்பாலான மரணங்களுக்கு இவையே காரணம் காட்டப்படுகின்றன.

வயோதிபர்கள் பெரும்பாலும் வீடுகளில் இறப்பதாலும் — நோய்க்காரணிகள் தெரியாமற் போய் விடுகின்றன. மரணத்தைப் பதிவு செய்ய உரித்துடையவர்கள் வெளிநாடுகளில் வாழ்கின்ற சூழலினாலும் ஏராளமான மரணங்கள் பதியப்படுவதில்லை.

சில இடங்களில் "ஆள் போய்விட்டது பதிவு எதற்கு" என்ற மனோபாவத்தினாலும் மரணங்கள் பதியப்படுவதில்லை.

வயோதிபத்தினால் ஏற்படும் மரணம், துப்பாக்கி, குண்டு வீச்சு மரணம், தற்கொலை மரணம், கொலை, இருதய பலவீனம், புற்றுநோய், போசாக்கின்மை, குடல், மூளை, சலரோகம், ஈரல் சம்பந்தமான நோய்களால் ஏற்படும் மரணங்கள், குழந்தை இறப்பு எனப் பல்வேறுபட்ட பிரிவுகளில் இந்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

### தகுதியில்லாத பதிவாளர்கள்

வடபிரதேசத்தில் கடந்த கால இறப்புப் பதிவேடுகளில் காணப்படும் குறைபாடுகளுக்குப் பல்வேறு நிலைமைகள்

தொகுப்பு: - இளநேசன் -

காரணங்களாக உள்ளன.

அவற்றில் பிரதானமானது பதிவாளர்களின் தகுதியின்மை. தனிப்பட்ட மற்றும் அரசியல் செல்வாக்குகளினால் தகுதியில்லாத பலர் பிறப்பு, இறப்பு, பதிவாளர்களாக நியமனம் பெற்று வருகின்ற நிலை காணப்படுகிறது.

மரணத்துக்கான உண்மையான காரணியைத் தெரிந்து கொள்கிற அளவுக்காவது பதிவாளர் வைத்திய அறிவைக் கொண்டிருக்க வேண்டும். இக்குறைபாட்டைத் தவிர்க்க குறைந்தது உதவி வைத்திய அதிகாரி தரத்தில் உள்ளவர்கள் பதிவாளர்களாக நியமிக்கப்பட வேண்டும். மேலும் இறப்புப் பதிவுக்கு ஆகக் குறைந்தளவு கொடுப்பனவே வழங்கப்படுகிறது இதுவும் அது விடயத்தில் அசிரத்தைப் போக்கை ஏற்படுத்துகிறது

கடந்த காலங்களில் கொல்லப்பட்டவர்கள் பலர் காணாமற் போனோர் பட்டியலிலும் இருக்கிறார்கள். மற்றும் அரசியல் காரணங்களுக்காகக் கொல்லப்பட்டவர்கள், துப்பாக்கிச் சூட்டினால் கொலையுண்டவர்களின் இறப்புக்களைப் பதிவதில் உரித்துடையவர்களிடையே பய உணர்வு காணப்படுகிறது. இவையும் கடந்த கால மரணங்கள் பதிவு செய்யப்படாமைக்குக் காரணங்களாக உள்ளன.

இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் தமது பதிவுப் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்தமை, மற்றும் பதிவாளர்கள் இடம்பெயர்ந்து வாழ்கின்றமை போன்றனவும் இறப்புப் பதிவில் உள்ள குறைபாடுகளுக்குக் காரணமான வேறு நிலைமைகள்.

இறப்புப் பதிவின் அவசியம் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே இல்லாமை, சமூக பண்பாட்டுப் பிரச்சினைகளால் மரணங்களுக்கான உண்மைக் காரணிகளை மறைத்தல் போன்றனவும் பதிவேடுகளில் காணப்படும் குறைபாடுகளுக்கு ஏதுவான பிற காரணிகளாக இருக்கின்றன.

இவை தவிர நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காகச் சிலர் இறப்புக்கான காரணிகளை மாற்றிப் பதிதல், உயிருடன் வாழ்கின்றவர்களும் இறப்புப் பதிவில் காணப்படுதல் போன்ற காரணிகளால் வடபிரதேச இறப்புப் பதிவில் குழறுபடிகள் ஏற்பட்டு வருவதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இறப்புப் பதிவுப் படிவங்களில் காணப்படும் சில குறைபாடுகளும், மேலதிகமான சில விடயங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டிய அவசியமும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவையே.

கடந்த 10 ஆண்டுகளில் பதிவான மரணங்களின் எண்ணிக்கையை வைத்துக்கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு புள்ளி விவரத்தில் நோர்வே நாட்டில் ஆயிரத்துக்கு ஒன்பது வீதம் எனக் காணப்படும் இறப்பு வீதம், யாழ்ப்பாணத்தில் ஆயிரத்துக்கு ஐந்து வீதமாகக் காணப்படுகிறது.

இதனைப் பார்க்கும்போது இங்கு இறப்பு வீதம் குறைந்து வருவது போல தெரிந்தாலும் அவற்றில் உண்மை இல்லை.

பதிவுகளில் உள்ள குறைபாடுகள், பிழையான புள்ளி விவரங்கள் உருவாக வழி வகுக்கின்றன. ★

# 'பாஸ்' இல்லாதோர் வவுனியாவில் கைதாவராம்

## ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 7

வவுனியாவுக்குள் 'பாஸ்' பெறாது பிரவேசிப்போர் கைதாவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா நகரில் 'பாஸ்' பெறாது வசிப்போரையும் 'பாஸ்' பெறாது நகரினுள் நுழைவோரையும் பொலிஸார் கைது செய்து விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திட்டம் ஒன்று நேற்று முதல் நடைமுறைக்கு வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் தம்மை அடையாளம் காட்டிக்கொள்ளுமுகமாக படையினரால் வழங்கப்படும் பாஸ்களைத் தம்மோடு வைத்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கின்றதாம்.

வவுனியாவில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில், சிவில் நிர்வாகம் நடைபெறும் பகுதிகளில் வசிப்போர் 'பாஸ்' பெற வேண்டும் என்று பாதுகாப்புப் படையினர் இரு மாதங்களுக்கு முன்னர் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

'பாஸ்' பெறாதோர் உடனடியாக அதனைப் பெற வேண்டும் என்று பொலிஸார் கடந்த ஞாயிறு ஒலிபெருக்கி மூலம் வவுனியா நகர் முழுவதும் அறிவித்தனர். [இ-எ]

# கொழும்பு நகரில் மீண்டும் தமிழ் இளைஞர்கள் கைது!

கொழும்பு நகரில் கடந்த வாரத்தில் 25 க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் வீதிகளிலும், பஸ்களிலும் வைத்து கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலும் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போது இவர்கள் கைது செய்யப்பட்டதால், இவர்களின் பெற்றோர்கள் அல்லது உறவினர்கள் இவர்களுக்கு என்ன நடந்தது என்பதை உடனடியாக அறிய முடியவில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு மாநகரசபை அலுவலகத்துக்கு முன்பாக சென்று கொண்டிருந்த 155 ஆம் இலக்க பஸ்வண்டியை பொலிஸார் மறித்து சோதனை நடத்தினர் என்றும் — அதில் பயணம் செய்த யாழ்ப்பாண அடையாள அட்டை வைத்திருந்த 12 தமிழரை கைது செய்து கறுவாத்தோட்ட பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களைத் தேடிப்பிடிக்க உறவினர்களுக்கு இரண்டு நாட்கள் எடுத்தனவாம். விசாரணை முடிந்து அவர்களை விடுவிப்போம் என்று பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டது. [த]

# தமிழில் வரவேற்புக் கீத நிகழ்ச்சி புறக்கணிப்பு!

மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்துக்கு ஜனாதிபதி வருகை தரும் போது அவருக்கு தமிழிலும் வரவேற்புக் கீதம் பாடச் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

வரவேற்புக் கீத நிகழ்ச்சியில் பங்குபற்ற இருந்த தமிழ் மாணவர் மத்தியில் இந்த நடவடிக்கை பெரும் ஏமாற்றத்தையும், வைபவத்தில் கலந்து கொண்ட தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும் ஏற்படுத்தியது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மாத்தளை மாவட்ட தமிழ்ப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ — மாணவிகளே தமிழில் வரவேற்புக் கீதம் பாட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதற்கான உடைகள் போன்றவற்றை வாங்குவதற்காக ஒவ்வொரு மாணவரும் 750 ரூபா வரை செலவழித்திருந்தனர்.

மாத்தளை கல்விப் பணிப்பாளரே தமிழில் வரவேற்புக் கீதம் பாடப்படவேண்டும் என்று பணித்திருந்தார்.

ஆனால் கடைசி நேரத்தில் இந்த நிகழ்ச்சி இடம் பெறாததால் தமிழ் மாணவ — மாணவிகள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். (த)

★ இன்று உலக சுகாதார தினம்:

# தடுப்பு நடவடிக்கை மூலம் ஆண்டொன்றுக்கு 60,000 இருதய நோயாளரைக் காப்பாற்றலாம்

இன்று உலக சுகாதார தினம் ஆகும். உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஹிரோஷி நக்கஜிமா இதனையொட்டி விடுத்த செய்தி கீழே பிரசுரமாகி உள்ளது.

உலகில் வேறெந்த நோயையும் விட இருதய நோய் பயங்கரமானது.

ஒவ்வொரு வருடமும் இறப்பவர்களில் கால்வாசிப் பேர் இருதய நோய் காரணமாகவே இறக்கிறார்கள். இருதய நோயால் வருடம் சுமார் 1 கோடி 20 லட்சம் பேர் வரையில் இறக்கிறார்கள்.

இருதய நோயால் இறப்பவர்கள் பெரும்பாலும் சராசரி வயதை அடையு முன்னர் இறப்பதால் அவர்களது குடும்பங்கள் தவிப்புக்கு ஆளாவதோடு நாட்டின் முன்னேற்றத்துக்குத் தேவையான திறமையும் இழக்கப்படுகிறது.

வளரும் நாடுகள் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளதால் அந்த நாடுகளிலும் அநேகர் இருதய நோய் காரணமாகவே இறக்கின்றனர். எனவே வளர்ச்சி அடைந்த நாடுகளில் தான் இருதய நோய் இறப்பு அதிகம் என்றிருந்த நிலை தற்போது மாறிவிட்டது.

எனினும் வளரும் நாடுகளில் வேறெங்கும் காணப்படாத வித்தியாசமான இருதய நோய்கள் காணப்படுகின்றன. வாதரோகத்தால் ஏற்படும் இருதய நோய்க்கு வறுமை காரணமாகிறது.

இந்த நாடுகளில் வாழ்க்கை முறையால் ஏற்படும் நோய்கள் குறைந்த மூலவளங்கள் மீது சுமையாக இருக்கின்றன.

உணவு, உடற்பயிற்சி - குறிப்பாக சகல வயதினருக்கும் பொருத்தமான நடந்து செல்லல் - என்பவற்றோடு புகையிலைப் பாவனையைக் குறைப்பதால் இருதய நோய் ஏற்படாமல் தடுக்கலாம்.

இருதய நோய் ஏற்படாமல் இருப்பதற்குச் சிபார்சு செய்யப்படும் வாழ்க்கை முறை. ஏனைய நோய்கள் ஏற்படாமலும் தடை செய்கின்றன. இத்தகைய வாழ்க்கை முறை குழந்தைப் பருவத்திலிருந்தே கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

"சுகமான இருதயம்" என்பதை இந்த ஆண்டின் உலக சுகாதார தின கருதுகோளாகக் கொள்வதன் மூலம் உலக சுகாதார ஸ்தாபனம் இருதய நோய்கள் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த விழைகிறது.

அத்துடன் இருதய நோய்களைத் தடுப்பதற்கு ஏதுவாக சுகாதார அதிகாரிகளுக்கு போதியளவு நிதி, உபகரணங்கள், ஆளணி என்பவற்றைக் கொடுத்து உதவுமாறு அரசாங்கங்களை வற்புறுத்துவதும் ஒரு நோக்கமாகும்.

தடுப்பு நடவடிக்கை மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 60 ஆயிரம் உயிர்களைக் காப்பாற்ற முடியும்.

(நன்றி:- ஐ. நா. சங்கம் யாழ் பிரிவு)

## கடாபி எச்சரிக்கை

திரிப்பொலி, ஏப். 7

மேற்கு நாடுகளுக்கு எதிராக ஒன்று திரளும்படி தாம் விடுத்த வேண்டுகோளுக்குச் செவிசாய்க்க அரபு நாடுகள் தவறுமானால் உலகெங்கும் உள்ள முஸ்லிம் அடிப்படைவாதிகளினதும், தீவிரவாதிகளினதும் கலீபாவாக என்னை நான் பிரகடனப்படுத்திக் கொள்வேன்.

லிபிய ஜனாதிபதி கேர்ணல் மும்மார் கடாபி நேற்று இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

திரிப்பொலியில் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரபு நாடுகள் ஐக்கியப்பட முன்வராவிட்டால் வட ஆபிரிக்காவில் இஸ்லாமியப் பேரரசு ஒன்று பிரகடனம் செய்யப்படும். அது முழு உலகினதும், வட ஆபிரிக்க முஸ்லிம்களினதும் கடமைகளைப் பொறுப்பேற்கும்.

இப்படி கேர்ணல் கடாபி தெரிவித்தார்.

## அநாதரவான சிசு

சுழிபுரம், ஏப். 7

சுழிபுரம், திருவடி நிலை தமிழ்க் கலவன் பாடசாலை பிரதான மண்டபத்துக்கு அருகில் அண்மையில் பிறந்த சிசு ஒன்று அநாதரவாகக் கிடக்கக் காணப்பட்டது

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினருக்கு அறிவிக்கப்பட்டது. [த-22]

# பத்திரிகைக் குழுவினர் தீவுப்பகுதிக்கு விஜயம்

கொழும்பு, ஏப். 7

கொழும்புப் பத்திரிகையாளர் குழு ஒன்று நேற்று திங்கட்கிழமை தீவுப்பகுதிகளுக்கு விஜயம் செய்ய ஏற்பாடாகி இருந்தது.

கூட்டுப்படைகள் தலைமையகம் இப்பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்ததாம்

திங்கள் காலை இரத்மலானையில் இருந்து புறப்படும் இப்பத்திரிகையாளர் குழு பலாலிக்கு முதலில் செல்லும் என்றும், அங்கு வைத்து யாழ். பாதுகாப்புப் படைத் தளபதி பாதுகாப்பு நிலைமைகளை அவர்களுக்கு விளக்குவார் என்றும் - பின்னர் இவர்கள் ஊர்காவற்றுறை புங்குடுதீவு, மண்டைதீவு, நயினாதீவு, காரைநகர் ஆகிய இடங்களுக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிடுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## வெங்காய உற்பத்தி

பெரிய வெங்காயச் செய்கைக்குத் தேவையான விதை வெங்காயத்தை உற்பத்தி செய்ய விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விதை வெங்காயம் தற்போது இறக்குமதி செய்யப்படுகின்ற போதும் இவற்றின் தரம் திருப்தியானதாக இல்லையென விவசாயிகளும் விவசாயத் திணைக்கள அதிகாரிகளும் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [த-10]

# முல்லைத்தீவுப் பகுதியில் ஆசிரியர் பற்றாக்குறை

## நடவடிக்கை எடுக்க கல்விப் பணிப்பாளர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப். 7

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதனை நீக்குவதற்கு வடக்கு-கிழக்கு மாகாணசபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. வே. சுப்பிரமணியம் வடக்கு — கிழக்கு மாகாண சபை செயலாளருக்கு இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 97 பாடசாலைகள் உள்ளன. இப் பாடசாலைகளில் 27 ஆயிரம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இதில் சுமார் 3 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்த மாணவர்களாவர்.

இவர்களுக்கு கல்வி கற்பிக்க குறைந்தது 1,100 ஆசிரியர்களின் சேவையாவது தேவை. ஆனால் இம் மாவட்டத்தில் சுமார் 700 ஆசிரியர்களே தற்போது சேவையில் உள்ளனர். இப் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்ய இன்னும் 400 ஆசிரியர்களாவது நியமிக்கப்படவேண்டும் என்று கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்த மாணவர்கள் பெரும்பாலும் உடையார்கட்டு அ.த.க பாடசாலை வள்ளிபுனம் அ.த.க. பாடசாலை. விசுவமடு அ.த.க பாடசாலை, புதுக்குடியிருப்பு றோ. க. த. க. பாடசாலை, புதுக்குடியிருப்பு சி. சி. த. க. பாடசாலை, அம்பலவன் பொக்கனை அ.த.க பாடசாலை ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்று வருவதாகவும் திரு. வே. சுப்பிரமணியம் மேலும் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே தினப் போட்டிகள்

எதிர்வரும் தொழிலாளர் தினமான மேதினத்தை முன்னிட்டு தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் பிரிவான பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைமையில் பின்வரும் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

1. பனையேறல்
2. குட்டான் இழைத்தல்
3. கிடுகு பின்னல்

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் 11 - 4 - 92 இற்கு முன் அயலிலுள்ள தெ. ப. பொ. கூ. சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

வெற்றி பெறுவோர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

பனை, தென்னை வள
அபிவிருத்தி ஒன்றியம்.

(சி/1774)

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை

# தலைமையலுவலகம்

அ. இணைப்பு அதிகாரி — கடற்தொழில்
ஆ. உதவி அலுவலர் — கடற்தொழில்

மேற்தறிப்பிட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்கூறிய பதவிகளுக்கு பின்வரும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தோர் மட்டும் விண்ணப்பிக்கவும்.

1. மருதங்கேணி
2. பருத்தித்துறை
3. சாவகச்சேரி
4. யாழ்ப்பாணம்
5. நல்லூர்
6. தெல்லிப்பளை
7. சண்டிலிப்பாய்
8. சங்கானை

இலங்கை கடற்தொழில் அமைச்சின் கீழுள்ள கடற்தொழில் பயிற்சிக் கல்லூரியில் பயின்றவர்கள் விரும்பப்படுவர். அத்துடன் தகுந்த கல்வித் தகைமையும், கடற்தொழில் அனுபவமும், ஆற்றலும், சேவை மனப்பான்மையுள்ளோர் விரும்பப்படுவர்.

விண்ணப்பங்கள் யாவும் 20-04-1992க்கு முன்பாக தலைமைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். நேர்முகப் பரீட்சை 24-04-1992 முற்பகல் 10-00 மணிக்கு நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டா.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். 4-4-92

[சி-1777]

---

# மரண அறிவித்தல்கள்

## மகேஸ்வரி (பபா) பிரான்சிஸ் சேவியர்

திருமதி மகேஸ்வரி [பபா] 2-4-92 பரிஸில் காலமானார். இவர் பிரான்சிஸ் சேவியரின் [பிரான்ஸ்] அருமை மனைவியும், நிரஞ்சனா [டாஜி, பிரான்ஸ்], நிரஞ்சன் [பிரான்ஸ்], சஞ்சீவ் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும், கேதீஸ்வரனின் [பிரான்ஸ்] அன்பு மாமியாரும், காலஞ்சென்ற திரு. சுப்பிரமணியம், திருமதி சுப்பிரமணியம் ஆகியோரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி அருளப்பாவின் மருமகளும், சிவபாக்கியலட்சுமி [ஓய்வுபெற்ற உப அதிபர், புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்], சிவனேஸ்வரி [புருணை], கருணாகரன் [பிரான்ஸ்], கிருபாகரன் [T. R. R. O. Ltd] ஆகியோரின் அன்புச் சகோதரியும், தங்கராசா [ஓய்வுபெற்ற பிரதம எழுது வினைஞர், விவசாய அலுவலகம், யாழ்ப்பாணம்], சிவானந்தமூர்த்தி [நில அளவையாளர், புருணை], பிரேமாவதி [பிரான்ஸ்], கலாவதி [ஆசிரியை, புனித யோண் பொஸ்கோ வித்தியாலயம்], அன்ரன் அருளப்பா [நீர்கொழும்பு], பேபி குணரட்ணம், வசந்தி இரட்ணசோதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 6-4-92 திங்கட்கிழமை [நேற்று] பரிஸில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
திருமதி சி. சுப்பிரமணியம்,
திருமதி சி. தங்கராசா,
திரு. சு. கிருபாகரன்.
[தாய் சகோதரர்கள்]

23 ராமசுந்தரம் அவெனியூ
சுண்டுக்குளி

[20379]

## செல்லப்பா இராசரத்தினம்

தெல்லிப்பழையைச் சேர்ந்த காலம் சென்ற திரு. திருமதி G. C. செல்லப்பாவின் சிரேஷ்ட புத்திரன் இராசரத்தினம் [Agricultural Instructor] காலமாகிவிட்டார்.

இவர் மகேஸ்வரி இராசரத்தினத்தின் [இளைப்பாறிய அதிபர் வல்வை மகளிர் மகாவித்தியாலயம்] அன்புக் கணவரும், அன்ரன் இராசதுங்கவின் [பொறியியலாளர் [U K] அன்புத் தந்தையும், செல்வமணியின் [U K] அன்பு மாமனாரும், இராசம்மா வரதுங்கம், Dr. இராசேந்திரம் [மெதடிஸ்த வைத்தியசாலை, புத்தூர்], இராசகுணநாயகம் [குணம்], இராஜசௌந்தரம் [இளைப்பாறிய ஆசிரியர்], இராசபூபதி [இளைப்பாறிய ஆசிரியை], இராசதேவி, ஞானோதயன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று செவ்வாய்க்கிழமை 7 - 4 - 92 காலை 9 மணிக்கு தெல்லிப்பழை 'செல்லப்பா' இல்லத்தில் நடைபெற்று பூசவுல் நடைபடகத்திற்காக குடும்ப கல்லறைத் தோட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
டாக்டர். சி. இராசேந்திரம்

[20381]

---

# கோலாலம்பூர் விமான நிலைய தீயில் மூவர் பலி

கோலாலம்பூர், ஏப். 7

கோலாலம்பூர் விமான நிலையத்தில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் 3 பாதுகாப்பு அலுவலர்கள் உயிரிழந்தனர். நான்கு பேர் காயமுற்றனர். இதன் காரணமாக விமான நிலையம் 7 மணி நேரம் மூடப்பட்டிருந்தது.

மின்சார ஒழுக்கு காரணமாக அல்லது கவனயீனமாக வீசப்பட்ட சிகரெட் துண்டினால் தீ மூண்டிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது.

[இ-10]

# அம்பாறை...

[1 ஆம் பக்க தொடர்ச்சி]

மாணவர்கள், முதியோர்கள் ஆகிய அனைத்து மக்களும் படையினரின் வன்முறைகளுக்கும், படுகொலைகளுக்கும் ஆளாகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் கரடியன் குளம், கணையான் குழி, மதுரையடி வெட்டை, பொன்னன் வெளி, சாளம்பையடி, சாயன் கேணி போன்ற தமிழ்க் கிராமங்கள் சிங்களக் குடியேற்றங்களினால் அபகரிக்கப்பட்டுள்ளன.

பொத்துவில் பிரதேச தமிழ்க் கிராமங்களை முஸ்லிம் ஊர் காவல் படையும், அரசாங்கப் படைகளும் சேர்ந்து அழித்தன.

இந்த மக்கள் அனைவரும் இன்று கோமாரிக் கிராமத்தில் குடிவசை அமைத்து வாழ்கிறார்கள். அவர்களும் அதிரடிப் படையினரின் இராணுவ நடவடிக்கைகளினால் இன்னற்படுகின்றனர். இவர்கள் நாய்கள் வளர்ப்பது கூடப் படையினரால் தடைசெய்யப்பட்டுள்ளது.

கோமாரியில் வசிக்கும் தமிழ் மக்களுக்கு உதவிகளோ, நிவாரணமோ ஒழுங்காகக் கிடைப்பதில்லை.

அம்பாறை மாவட்டத்தில் விசேட அதிரடிப்படை முகாம்கள், இராணுவ முகாம்கள், விமானப் படை முகாம், பொலிஸ் நிலையம், முஸ்லிம் ஊர்காவல் படை நிலையங்கள் என்று மொத்தம் 76 முகாம்கள் உள்ளன. — என்றார். [அ]

# மனைவி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேறாததால் தனது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீமூட்டவும், கிருமிநாசினி அருந்தவும் கணபதி சிவபாதம் முயற்சித்தார் என்றும் கூறப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக கணபதி சிவபாதத்தின் மைத்துனரான கணபதிப்பிள்ளை தேவராஜா [தங்கையின் கணவன்] தெரிவித்ததாவது:-

வீட்டில் இருந்து சுமார் 200 யார் தூரத்தில் உள்ள வேப்பமரம் ஒன்றில் பவளராணி சுருக்கிட்டுத் தொங்கிக்கொண்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டு அங்கு ஓடிச் சென்றேன். கயிற்றை அறுத்து அவரைத் தூக்கிக்கொண்டு வரும்போது, அவரது மூத்த பிள்ளையான பிரியா [12 வயது], ''அப்பா எல்லோரையும் வெட்டுகிறார்'' என்று குழறிக் கொண்டு ஓடிவந்தார்.

பவளராணியை அவ்விடத்திலேயே கிடத்திவிட்டு வீட்டுக்கு ஓடிச்சென்ற சமயம் மூன்று பிள்ளைகளும் தொண்டை வெட்டப்பட்ட நிலையில் முற்றத்தில் கிடந்தனர். வீட்டுக்குள் சென்றபோது சிவபாதம் தம்மை வெட்டிக் கொண்டிருந்தார். அருகே வந்தால் என்னையும் வெட்டுவதாக அவர் பயமுறுத்தினார்.

அவரை விட்டுவிட்டு மூன்று பிள்ளைகளையும் அயலவரின் உதவியுடன் தூக்கிக்கொண்டு வரும்போது பிரியதர்ஷன் என்ற சிறுவன் மரணமானான்

—இப்படி அவர் கூறினார்.

தந்தையாரான சிவபாதம் பின்னர் சாவகச்சேரி காவல் துறையினரால், ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டார்.

# புலிகள் தொடர்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாம்.

எனினும் ராஜீவ் கொலை வழக்கு, தமிழகத்தில் ஆட்சி புரியும் ஜெயலலிதா அரசின் புலிகள் விரோதக் கொள்கை ஆகியன இதற்கு முட்டுக்கட்டையாக இருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

எவ்வாறாயினும் இந்திய விவகாரத்தில் விடுதலைப் புலிகள் எத்தகைய போக்கை கடைப்பிடிக்க விரும்புகிறார்கள் என்பதை அறிந்து கொள்ளவும் இந்திய உயர் வட்டாரங்கள் ஆவலாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ]

---

கிராம சேவை உத்தியோகத்தர் தெரிவுக்கான

# போட்டிப் பரீட்சை - 1992

யா / கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்படும் பயிற்சி வகுப்பு

பாடங்கள்: 1. மொழி ஆற்றல் 2. பொது அறிவு 3. விவசாய அறிவு

பதிவு செய்தல்: 12-04-1992 ஆந் திகதிக்கு முன்.

வகுப்பு ஆரம்பம்: 15-04-1992.

விவரங்களுக்கு: திரு. ஆ. சி கணேசவேல் J. P.
உப-தபாற்கந்தோரடி, கந்தரோடை.

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்

[20380]

---

யாழ். மாவட்ட இறைச்சி கடைகள் வியாபாரிகள் சங்க

# ஆண்டு விழாக் கூட்டம்

இடம்: இல. 9, சின்னக் கடை வடக்கு வீதி, சங்கக் காரியாலயம்.

காலம்: 10-4-1992 வெள்ளிக்கிழமை, பிற்பகல் 2-00 மணி.

பிரதம அதிதிகள்:
தமிழீழ காவல் துறை பொறுப்பாளர்
திரு. பா. நடேசன்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
திரு. சு. டிவகலாலா,
யாழ் மாநகர சபை ஆணையாளர்
திரு. வே. பொ. பாலசிங்கம் ஆகியோர்.

மற்றும் சுகாதார வைத்திய உணவுப் பரிசோதகர், கால்நடை வைத்திய அதிகாரி ஆகியோரும் கலந்து கொள்வதால் தவறாமல் அனுமதி பெற்ற சகல ஆட்டு-மாட்டு இறைச்சிக் கடை உரிமையாளர்கள் கலந்து கொள்ள அழைக்கப்படுகின்றனர்.

க. சி. கிருஷ்ணன்
செயலாளர்

(சி-1776)

---

ரூபவாஹினி செய்தி அறிவிப்பாளர் விவகாரம்:

# பொட்டு வைப்பதற்கு தடையில்லை என்கிறார் அமைச்சர் ரணசிங்கா

கொழும்பு, ஏப். 7

ரூபவாஹினியில் ஆங்கில செய்தி வாசிக்கும் பெண் அறிவிப்பாளர்கள் நெற்றியில் பொட்டு வைத்துக் கொள்வதில் தவறில்லை. அதற்குத் தடையுமில்லை.

தகவல் ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அறிவிப்பாளர்கள் மத, கலாசார சின்னங்களை செய்தி வாசிப்பின் போது அணியவே அனுமதியில்லை என்றும் அமைச்சர் விளக்கினார்.

செய்தி வாசிக்கும் பொழுது பொட்டு வைத்திருக்கவும் அனுமதியில்லை என்று தான் கூறவில்லை என்றும் — அவ்வாறு சில பத்திரிகைகளில் வந்த செய்திகள் தவறானவை என்றும் அவர் தெரிவித்தார்.

ஆங்கிலச் செய்தியை சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் ஆகிய எல்லா மொழி பேசுபவர்களும் பார்ப்பதால், ஆங்கிலச் செய்தி பொதுவானது. எனவே அதை வாசிக்கும் போதும் பொதுவான தோற்றத்திலேயே காணப்பட வேண்டும் என்று செய்தியாளர் மாநாடொன்றில் அமைச்சர் கூறியதும் அதைத் தொடர்ந்து செய்தியாளர்களுக்கும் அமைச்சருக்கும் இடையே சூடான வாக்குவாதம் எழுந்ததும் — அதன் காரணமாகப் பொட்டு விவகாரம் சூடு பிடித்ததும் தெரிந்தவையே. [த]

# இன்று

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும் ஓர் ஆட்டத்தில் யாழ். சென்லூட்ஸ் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் அணி மோதும்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் மற்றைய ஆட்டத்தில் சிவானந்தா அணியை எதிர்த்து நண்பர்கள் அணி மோதும்.

இரு ஆட்டங்களும் பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகும். (உ)

★ ★ ★

தென்மராட்சி, ஏப். 7

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நடத்தும் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகளில், கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில், இன்று செவ்வாய்க்கிழமை திருமலை நட்சத்திரங்கள் அணியும் மட்டுவில் மோகனதாஸ் அணியும் பங்குபற்றுகின்றன.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் சாவகச்சேரி ரேகா அணியும் சாவகச்சேரி புனித லிகோரியார் அணியும் மோதும். [இ-117]

# உற்சவங்கள்

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவில் மகோற்சவம் இன்று காலை 10-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 8-30 மணிக்கு தேர்த்திருவிழாவும், பிற்பகல் 4-00 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும். [த]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 7

சுன்னாகம் கிழக்கு அருள்மிகு சிவபூதராஜ சுவாமி ஆலயத்தில் இன்று நடைபெறும் கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகிறது. இவ்வாலயத்தில் கொடியேற்ற விழா நடைபெற்றது இதுவே முதல் தடவையாகும்.

இன்று ஆலய வரலாறு பற்றிய நூலும் வெளியிடப்படுகிறது. தேர்த்திருவிழா இம்மாதம் 15ஆம் திகதி இடம்பெறும். [அ]

# உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஏப். 7

தியாக தீபம் அன்னை பூபதியின் நான்காவது ஆண்டினை நினைவு கூருமுகமாக இடம்பெற்று வரும் உண்ணாவிரதமும், நினைவுக் கருத்தரங்கும் இன்று மாதகல் சென் தோமஸ் தேவாலயத்தில் நடைபெறும். [த]

# வடமராட்சிக்கு விஜயம்

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் இன்று செவ்வாய்க்கிழமை வடமராட்சியில் உள்ள அகதி முகாம்களுக்கு விஜயம் செய்கின்றனர்.

அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு உடுதுணிகளை வழங்கவும் ஏற்பாடாகி உள்ளது.

[இ-5]

---

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
இலங்கை.

## விஞ்ஞான பீட முதலாவது அரையாண்டுப் பரீட்சை - 1991

மேற் கூறப்பட்ட பரீட்சைகள் கீழ்க் குறிப்பிட்ட திகதிகளில் ஆரம்பமாகும்.

முதலாவது அரையாண்டு முதலாம் வருடப் பரீட்சை — 20-04-1992.

முதலாவது அரையாண்டு இரண்டாம் வருடப் பரீட்சை — 27-04-1992.

முதலாவது அரையாண்டு மூன்றாம் வருடப் பரீட்சை — 02-05-1992

- பதிவாளர்.

[சி-1773]

---

# இலங்கை வங்கி

## தமிழ்ப் புத்தாண்டு

பண்டிகைக்கால வெகுமதியாக
சேமிப்புச் சான்றிதழ்களுக்கு அதிகரித்த
வட்டியை வழங்குகிறது.

காலம்: 6-4-1992 முதல் 30-6-1992 வரை மட்டும்

| சேமிப்புச் சான்றிதழின் பெறுமதி | | நீங்கள் செலுத்த வேண்டிய தொகை: 6 மாத முதிர்வுக்கு | 12 மாத முதிர்வுக்கு | 24 மாத முதிர்வுக்கு |
|---|---|---|---|---|
| ரூபா | 200 | 186/- | 172/- | 149/- |
| ரூபா | 500 | 466/- | 431/- | 373/- |
| ரூபா | 1,000 | 932/- | 862/- | 746/- |
| ரூபா | 5,000 | 4,662/- | 4,310/- | 3,731/- |
| ரூபா | 10,000 | 9,324/- | 8,621/- | 7,463/- |
| ரூபா | 25,000 | 23,310/- | 21,552/- | 18,657/- |

★ உங்கள் அன்பிற்குரியோருக்கு புத்தாண்டுப் பரிசாக இலங்கை வங்கி சேமிப்புச் சான்றிதழ்களை கொள்வனவு செய்து அன்பளிப்புச் செய்யுங்கள்.

இதோ இன்னுமோர் அரிய வாய்ப்பு!

இலங்கை வங்கியின் உத்தரவாதத்துடன்,
உங்கள் முதலீடுகள் பல்கிப் பெருகிட
"சீ பாங் யூனிட் ரஸ்ட்"
பங்குகளில் முதலீடு செய்யுங்கள்.
விவரங்களுக்கு முந்துங்கள்!

இலங்கை வங்கி
கிளைகளை நாடுங்கள்!

[சி/1778]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் ... இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 7 - 4 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org